தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com



RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI


காலை நாளிதழ்









| Vol: 02 | Issue: 127 | 4 Pages | 5.12.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 127 | 4 பக்கங்கள் | 5.12.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யாப் படும்**

**விளக்கம்:** நாவை அடக்கி விக்கல் மேலெழுவதற்கு முன்னே (இறப்பு நெருங்குவதற்கு முன்) நல்ல அறச்செயலை விரைந்து செய்யத்தக்கதாகும்.

## சீறி பாயும் குட்டி ராஜநாகத்தை ஆசுவாசப்படுத்தும் நபர் வீடியோ வைரல்



அமெரிக்கா, டிச.5

உலகின் கொடிய விஷம் கொண்ட பாம்புகளில் ஒன்றாக ராஜநாகம் கருதப்படுகிறது. ஒரு வளர்ந்த ராஜநாகம் தன்னுடைய உடலில் 1 லிட்டர் அளவுக்கு விஷத்தை சேமித்து வைத்து கொள்ளும் தன்மை கொண்டது. ஒரு கடிக்கு 170250 மிலி அளவுக்கு விஷத்தை செலுத்தும்.

இந்த விஷமே, 10 மனிதர்களையும், ஒரு யானையையும் கொல்ல போதுமானவை. ஆனால் வளர்ந்த நாகங்கள் எதிரியின் மீது எவ்வளவு அளவில் விஷத்தை செலுத்த வேண்டும் என்ற கட்டுப்பாடு கொண்டவை. அதன் குட்டிகளுக்கோ அத்தகைய கட்டுப்பாடுகள் கிடையாது. இதனால் ராஜநாகத்தின் குட்டிகளிடம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது என்பார்கள்.

இந்தநிலையில் குட்டி ராஜநாகத்தை ஒருவர் சாதாரணமாக கொஞ்சுவது தொடர்பான வீடியோ இணையத்தில் வெளியாகி உள்ளது. கை விரல்களில் சுருண்டு கொண்டு சீறி பாயும் அந்த குட்டி பாம்பை ஆசுவாசப்படுத்தி தடவி கொடுக்கிறார். 14 லட்சம் பார்வைகளை கடந்து இது வைரலாகி வருகிறது.

## கடற்கரை பாறையில் யோகா செய்த நடிகை அலையில் சிக்கி பலி



ரஷ்யா, டிச.4

கடல் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். ஆனால் ஆபத்து நிறைந்தது. பலரும் அதை உணருவதில்லை.

சமீபத்தில் ஃபெஞ்சல் புயல் காரணமாக சென்னை, மாமல்லபுரம் உள்ளிட்ட கடல் பகுதிகள் சீற்றமாக இருந்தது. யாரும் கடற்கரைக்கு செல்ல வேண்டாம் என்று போலீசார் அறிவுறுத்தியும் பலர் அதை கண்டுகொள்ளாமல் கடற்கரைக்கு குடும்பத்துடன் சென்று விளையாடியதை பார்த்தோம். சீற்றம் அதிகமுள்ள நேரத்தில் மட்டுமல்ல, சாதாரண நாட்களிலும் முன்னெச்சரிக்கை இன்றி கடற்கரை பகுதிக்கு செல்வது ஆபத்துதான்.

இதை உணராமல், கடற்கரை பகுதிக்கு சென்ற நடிகை ஒருவர் அலையில் சிக்கி பலியாகியுள்ளார். அந்த பரிதாப சம்பவம் பற்றிய விவரம் வருமாறு: ரஷிய நாட்டின் பிரபல நடிகை கெமில்லா பெல்யாஸ்டாக்யா. 24 வயதான அவர் தனது காதலனுடன், தாய்லாந்தில் உள்ள சுற்றுலா தலமான கோசியா மியூய் தீவிற்கு சென்றார். யோகா ஆர்வலரான கெமில்லா, கடற்கரையில் உள்ள ஒரு பாறையில் அமர்ந்து கண்களை மூடியபடி யோகா செய்தார். அப்போது கடல் அலைகள் சீற்றமாக இருந்தது. திடீரென்று ஒரு பெரிய அலை கரைக்கு வந்து யோகா செய்து கொண்டு இருந்த நடிகை கெமில்லாவை கடலுக்குள் இழுத்துச் சென்றது. அலைல் சிக்கிய அவர், கடலுக்குள் உயிருக்கு போராடினார். நீண்ட நேரம் கடலில் தத்தளித்து கொண்டு இருந்த அவரை மீட்க யாரும் இல்லாததால், கடலில் மூழ்கினார். 15 நிமிடத்துக்கு பிறகு மீட்பு குழுவினர் அங்கு வந்தனர். கடல் சீற்றம் அதிகம் இருந்ததால் தேடுவதை நிறுத்தி விட்டனர். சில நிமிடங்களுக்கு பிறகு, வேறு பகுதியில் கெமில்லாவின் உடல் கரை ஒதுங்கியது. நடிகை கெமில்லா பாறையில் அமர்ந்து யோகா செய்வதும், அவரை கடல் அலை இழுத்து செல்வதும், கடலில் அவர் தத்தளிப்பதும் அந்த பகுதியில் இருந்த கண்காணிப்பு கேமராவில் பதிவானது. இந்த காட்சிகள் தற்போது சமூகவலைத்தளத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது.

## தென்கொரியாவில் அவசரநிலையை நீக்க மந்திரி சபை கூட்டத்தில் ஒப்புதல்

சியோல், டிச.5

கொரிய தீபகற்பத்தில் அமைந்துள்ள தென்கொரியா நாடானது, அமெரிக்கா, ஜப்பானின் கூட்டணி நாடாக உள்ளது. இந்த பகுதியில் அமைந்துள்ள மற்றொரு நாடான வடகொரியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளது. வடகொரியாவோ, ரஷியா மற்றும் சீனா நாடுகளுடன் இணக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. இதனால், அமெரிக்காவுக்கும், வடகொரியாவுக்கும் இடையே நீண்டகால பனிப்போர் சூழல் காணப்படுகிறது. இந்த நிலையில், வடகொரியாவுடன் சேர்ந்து கொண்டு அரசை முடக்க எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர் என தென்கொரிய அதிபர் பரபரப்பு குற்றச்சாட்டை கூறினார். இதனை தொடர்ந்து நாட்டில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக ராணுவ தலைவர், முக்கிய தளபதிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்து ஆலோசனை மேற்கொண்டார். இதன்பின்பு, நாடாளுமன்றத்திற்குள் நுழைவதற்கான கட்டுப்பாட்டை தங்கள் கைவசம் கொண்டு வந்து தடுப்பான்களை அமைத்தனர். எனினும், உறுப்பினர்களை வரும்படி எதிர்க்கட்சி தலைவர் அழைப்பு விடுத்ததுடன், அவசரநிலை அறிவிப்பை நீக்குவதற்காக வாக்களித்தனர். இந்த சூழலில், தென்கொரியாவின் அதிபர் யூன் சுக் இயோல் தொலைக்காட்சி வழியே (இந்திய நேரப்படி அதிகாலை 1.15 மணி) உரையாற்றினார். அப்போது அவர், அவசரநிலையை வாபஸ் பெறும்படி சில நிமிடங்களுக்கு முன்பு வலியுறுத்தப்பட்டது. அவசரநிலை நடவடிக்கைகளுக்காக குவிக்கப்பட்ட ராணுவ வீரர்களை நாங்கள் வாபஸ் பெற்றுள்ளோம். நாடாளுமன்றத்தின் கோரிக்கையை நாங்கள் ஏற்று, மந்திரி சபை கூட்டத்திற்கு பின்பு அவசரநிலை வாபஸ் பெறப்படும் என கூறியுள்ளார். இதற்கு முன், யூன் சுக்கின் அவசரநிலை அறிவிப்புக்கு அந்நாட்டின் மிக பெரிய, கொரியன் வர்த்தக யூனியன் கூட்டமைப்பு கடும் எதிர்ப்பு தெரிவித்தது. 12 லட்சம் உறுப்பினர்களை கொண்ட கொரியாவின் மிக பெரிய தொழிலாளர் அமைப்பான அதன் தலைவர் கிம் ஜின் யூக் கூறும்போது, சட்டவிரோத அவசரநிலை உத்தரவை கட்டுப்படுத்துவதற்காக நாங்கள் கூடியிருக்கிறோம். அதிபருக்கு கண்டனம் தெரிவிக்கிறோம். இந்த முட்டாள்தன செயலை அவர் செய்கிறார் என என்னால் நம்பவே முடியவில்லை என கூறினார். இந்த சூழலில், அதிபரின் அறிவிப்பு வெளிவந்துள்ளது. எனினும், அவசரநிலை அறிவிப்பை அதிபர் யூன் சுக் இயோல், முழுமையாக நீக்கும் வரை இந்த நிலையே தொடரும் என அந்நாட்டின் அரசியல் வட்டாரம் தெரிவித்தது. இந்நிலையில், தென்கொரியாவில் பிறப்பிக்கப்பட்ட அவசரநிலையை நீக்க மந்திரி சபை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.

# சென்னை மாநிலக் கல்லூரியில் புதிய விடுதிகள்: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, டிச.5

சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் ரூ.21.60 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள சிறப்பு மாணவர் மற்றும் மாணவியர் விடுதி கட்டிடங்களை முதல்அமைச்சர் மு.க ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலை வாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதி வாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில புதுமைப் பெண் திட்டம்.

அதேபோன்று அரசுப் பள்ளி மாணவர்கள் உயர் கல்வி பயில தமிழ்ப்புதல்வன் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1000/ உதவித் தொகை வழங்குதல். முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.



சென்னை மாநிலக் கல்லூரியில் 5.07.2022 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 300க்கும்மேற்பட்டசிறப்புமாணவ, மாணவியர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களில் இருந்து இங்கே வந்து,

தங்கிப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு தேவையான வசதிகளுடன் கூடிய விடுதிகள் இல்லாத காரணத்தால். சிறப்பு மாணவ, மாணவியர்களுக்கான சிறப்பு வசதிகளுடன் மாநிலக் கல்லூரி வளாகத்திலேயே அவர்களுக்கு விடுதி அமைத்துத் தரப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் 21 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சிறப்பு மாணவர் மற்றும் மாணவியர் விடுதிக் கட்டடங்களை தமிழ்நாடு முதல் அமைச்சர் இன்றைய தினம் திறந்து வைத்து, அங்கிருந்த மாணவர்களிடம் கலந்துரையாடினார்.

முதல்அமைச்சருடன், துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இழப்பீடு போதுமானதல்ல.. ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, டிச.5

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு தலா ரூ.2000, சேதமடைந்த பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.6,800 இழப்பீடாக வழங்கப்படும் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கிறார்.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளையும், இழப்பீட்டையும் ஒப்பிட்டால் மலைக்கும், மடுவுக்குமான வித்தியாசம் தென்படுகிறது. தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள நிவாரண உதவி சிறிதும் போதுமானதல்ல.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு, அதிலும் 33 சதவீதத்திற்கும் கூடுதலாக பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு மட்டும், ஏக்கருக்கு ரூ.6,800 நிதியுதவி வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்திருக்கிறது. இது சம்பா பருவத்தில் விதைக்காகவும், அடியுரத்திற்காகவும் உழவர்கள் செய்த செலவைக் கூட ஈடு செய்யாது. கடந்த ஆண்டு நெய்வேலியில் என்.எல்.சி நிறுவனத்தால் அழிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.40,000 வீதம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டு ஆணையிட்டது. தமிழக அரசும் அதை அப்படியே ஏற்றுக் கொண்டு என்.எல்.சியிடமிருந்து இழப்பீட்டைப் பெற்றுக் கொடுத்தது.



அண்டை மாநிலமான புதுச்சேரியில் புயல் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூ.30,000 வீதம் இழப்பீடு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கும் போது தமிழக உழவர்களுக்கு மட்டும் ஏக்கருக்கு வெறும் ரூ.6,800 இழப்பீடு வழங்குவது நியாயமானது அல்ல. ஒரு ஏக்கரில் நெல் பயிரை சாகுபடி செய்ய ரூ.30 ஆயிரம் வரை செலவாகும் நிலையில், ரூ.40 ஆயிரம் இழப்பீடு வழங்குவதுதான்சரியானதாக இருக்கும். இல்லாவிட்டால் அவர்கள் கடனாளியாகி விடுவார்கள்.

அதேபோல், பல்லாண்டு பயிர்கள் மற்றும் மரங்களுக்கு ஏக்கருக்கு ரூ.9,000, மானாவாரி பயிர்களுக்கு ரூ.3,400, மாடுகளுக்கு ரூ.37,500, ஆடுகளுக்கு ரூ.4000, கோழிகளுக்கு ரூ.1000 வீதம் இழப்பீடு வழங்கப்படும் என்பதும் ஏற்றுக் கொள்ள முடியாதவையாகும். இவை அனைத்துக்கும் மேலாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.2000 மட்டுமே வழங்கப்படும் என்பது அவர்களை கொச்சைப்படுத்தும் செயலாகும்.

கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு அவர்கள் எந்த வகையிலும் காரணம் அல்ல. மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு காரணம் இயற்கையின் சீற்றம் என்பதையும் கடந்து ஆட்சியாளர்களின் அலட்சியம் தான் என்பதை அனைவரும் அறிவார்கள். ஒருபுறம் விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் கடுமையான மழை பெய்தது என்றால், இன்னொருபுறம் சாத்தனூர் அணையிலிருந்து முன்னறிவிப்பின்றி வினாடிக்கு 1.68 லட்சத்திற்கும் கூடுதலாக தண்ணீர் திறக்கப்பட்டது தான் பேரழிவுக்கு காரணமாகும். அந்த வகையிலும் மக்களின் துயரங்களுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்.

சாத்தனூர் அணை தண்ணீர் திறக்கப்பட்டதால் ஊருக்குள் தண்ணீர் புகுந்து வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறைந்தது ரூ. 2 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை இழப்பு ஏற்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு வெறும் ரூ.2,000 இழப்பீடு வழங்குவது எந்த வகையிலும் போதுமானது அல்ல. சென்னையில் கடந்த ஆண்டு மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.6,000 வீதம் இழப்பீடு வழங்கப்பட்ட நிலையில், அவர்களை விட மிக மோசமான பாதிப்புகளுக்கு உள்ளான கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு ரூ.2000 மட்டுமே வழங்கப்படும் என்ற அறிவிப்பு மிகவும் அநீதியானது. இது அவர்களின் மன வேதனையை அதிகரிக்கவே செய்யும்.

எனவே, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் மட்டுமின்றி, பிற மாவட்டங்களிலும் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குறைந்தது ரூ.10,000 வீதம் இழப்பீடு வழங்கப்பட வேண்டும். அதேபோல், சேதமடைந்த நெற்பயிர்களுக்கு எந்தவித நிபந்தனையும் இல்லாமல் ஏக்கருக்கு ரூ.40,000 வீதம் இழப்பீடு வழங்கப்பட வேண்டும்; அதுமட்டுமின்றி, பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய இழப்பீட்டை முழுமையாக பெற்றுத் தரவும் அரசு முன்வர வேண்டும்.

கரும்புக்கு ஏக்கருக்கு ரூ.1.20 லட்சம் வீதமும், நிலக்கடலைக்கு ரூ.33,000 வீதமும், பிற பணப்பயிர்களுக்கு அவற்றின் சந்தை மதிப்புக்கு ஏற்ப ஏக்கருக்கு ரூ.1.25 லட்சம் வரை இழப்பீடு வழங்கப்பட வேண்டும். இவை அனைத்துக்கும் மேலாக இந்தப் பகுதிகளைச் சேர்ந்த உழவர்களின் துயரத்தை முழுமையாக துடைக்கும் வகையில் அனைத்து வகை பயிர்க்கடன்களும் முழுமையாக தள்ளுபடி செய்யப்பட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாசரேத் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியில் 'மிஷன் இயற்கை' திட்ட சிறப்பு நிகழ்ச்சி



நாசரேத், டிச.5

நாசரேத் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியில் மிஷன் இயற்கை திட்ட சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் பள்ளிகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் வகையில் மிஷன் இயற்கை திட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒருபகுதியாக, நாசரேத் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு பனை பொருட்கள் சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. தலைமை ஆசிரியர் குணசீலராஜ் தலைமை வகித்தார். தூத்துக்குடி நாசரேத் திருமண்டல சுற்றுச்சூழல் கரிசனத்துறையின் இயக்குனர் கனம். ஜாண் சாமுவேல் முன்னிலை வகித்தார். இயற்பியல் ஆசிரியர் ஜெர்சோம் ஜெபராஜ் வரவேற்றார். தமிழ்நாடு பனைத் தொழிலாளர்நலவாரியஉறுப்பினர் கனம். காட்சன் சாமுவேல் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். பனை ஒலையில் பள்ளி மாணவர்களுக்குத் தேவையான பொருட்கள் செய்வது, குழந்தைகளுக்கு தேவையான விளையாட்டு பொருட்கள் செய்வது, பனை நாரில் பைகள் செய்வது, வர்ணங்கள் பூசப்பட்ட பனை ஒலையில் பொருட்கள் செய்வது குறித்து மாணவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. பனை ஓலையில் செய்யப்பட்ட தொப்பி மற்றும் பனைநாரில் செய்யப்பட்ட பெரிய பை ஆகியவை மாணவர்களுக்கு காண்பிக்கப்பட்டன. மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியின் தேசிய பசுமை படை மற்றும் பசுமை மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில், உடற்கல்வி இயக்குனர் பெலின் பாஸ்கர், ஓவியக்கலை ஆசிரியர் அலெக்ஸன் கிறிஸ்டோபர் ஆகியோர் கலந்து கொண்டனர். உடற்கல்வி ஆசிரியர் தனபால் நன்றிகூறினார். நாசரேத் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியில் நீர் பாதுகாப்பு மேலாண்மை, சொட்டு நீர் பாசனம் மற்றும் மூலிகை தோட்டம் ஆகியவை மிஷன் இயற்கை திட்டத்தின் கீழ் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தாளாளர் சுதாகர் வழிகாட்டுதலின்படி உதவி தலைமை ஆசிரியை சாரா ஞானபாய், உதவி தலைமை ஆசிரியர் சார்லஸ் திரவியம், தேசிய பசுமைப்படை பொறுப்பாசிரியர் அம்புரோஸ் சுகிர்தராஜ், தேசிய மாணவர் படை அலுவலர் சுஜித் செல்வ சுந்தர், பிற ஆசிரியர்கள், ஆசிரியைகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் செய்திருந்தனர்.

# கொடைக்கானலில் கடும் பனிமூட்டத்துடன் சாரல் மழை வாகன ஓட்டிகள் அவதி

கொடைக்கானல், டிச.5

கொடைக்கானலில் கடந்த சில நாட்களாகவே மிதமான மழை மற்றும் கனமழை பெய்து வருகிறது. 2 நாட்களாக அவ்வப்போது திடீரென கடும் பனிமூட்டம் நிலவி வந்தது. இந்நிலையில் இன்று அதிகாலை முதலே கடும் பனிமூட்டத்துடன் கூடிய சாரல் மழை பெய்து வருகிறது.

எதிரே யார் வருகிறார்கள் என்பது கூட தெரியாத அளவிற்கு பனிமூட்டம் சூழ்ந்துள்ளது.

இதனால் இரு சக்கர வாகனம் முதல் நான்கு சக்கரவாகனம் எனஅனைத்து வாகன ஓட்டிகள் வாகனங்களை இயக்குவதில் கடுமையான சிரமத்திற்கு உள்ளாகினர்.



வாகனங்களில் முகப்பு விளக்கை எரியவிட்டபடி ஓட்டிச் செல்கின்றனர். பல்வேறு தனியார் பள்ளிகள் விடுமுறை அறிவித்த நிலையில் அரசு பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்காததால் மாணவமாணவிகள் ஏமாற்றமடைந்தனர். பள்ளிக்கு செல்வதா வேண்டாமா என அரசு நிர்வாகம் மாணவ மாணவிகளை குழப்பத்திற்கு உள்ளாக்கியுள்ளது. 8 மணி வரை அரசு பள்ளி நிர்வாகம் சார்பில் எந்த அறிவிப்பும் வராததால் மாணவமாணவிகள் கடும் அவதிக்கு மத்தியில் பள்ளிக்கு புறப்பட்டு சென்றனர்.

உள்ளூர் அரசு துறை சார்ந்த அதிகாரிகள் முன்னதாகவே எந்த அறிவிப்பையும் மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்காததால் மாவட்ட நிர்வாகம் விடுமுறை அறிவிப்பதில் தாமதம் காட்டியது.

அதிகாலை முதலே மின்சாரமும் இல்லை கடும் பனிமூட்டத்துடன் சாரல் மழையும் இருந்து வந்ததால் பொதுமக்கள் மற்றும் நோயாளிகள் மிகுந்த சிரமம் அடைந்தனர்.

அடிக்கடி மின் தடை ஏற்படுவதால் தொலை தொடர்பு சேவையும் பாதிக்கப்பட்டு வருகிறது. இதேபோல் மலைகிராமங்களிலும் தொடர்ந்து சாரல் மழை பெய்ததால் விவசாய பணிகள் பாதிக்கப்பட்டது.



விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை தாலுகா செம்பட்டி கிராமத்தில் தொழிலாளர்களுக்கு அரசுநலவாரிய பதிவு செய்தன் மூலமாக கிடைக்கும் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது மற்றும் பெண்களுக்கான சுயவேலை வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது கூட்டத்திற்கு மாநில தலைவர் பாண்டியன் தலைமை தாங்கினார், மாநில பொதுச் செயலாளர் முருகேசன் அவர்கள் உரையாற்றினார்.

# சுவாமிமலை கோவிலில் திருக்கார்த்திகை திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்குகிறது

சுவாமிமலை, டிச.5

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகே சுவாமிமலையில் சுவாமிநாத சுவாமி கோவில் உள்ளது. இக்கோவில் முருகனின் அறுபடை வீடுகளில் 4ம் படை வீடாகும். இக்கோவிலில் ஆண்டுதோறும் திருக்கார்த்திகை திருவிழா சிறப்பாக நடைபெறுவது வழக்கம்.

அதன்படி, இந்த ஆண்டு திருவிழா இன்று (புதன்கிழமை) இரவு 7 மணிக்கு அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜையுடன் தொடங்கி, நாளை (வியாழக்கிழமை) காலை கொடியேற்றம் நடக்கிறது.

தொடர்ந்து, விநாயகர், வள்ளி, தேவசேனா சமேத சுப்பிரமணியர் பரிவாரங்களுடன் மலைக்கோவிலில் இருந்து உற்சவ மண்டபம்



எழுந்தருளல்நிகழ்ச்சியும், இரவு யாகசாலை பூஜை, சுவாமி வீதிஉலா திக் பந்தனம் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

அதனைத் தொடர்ந்து, 8 நாட்கள் படிச்சட்டத்தில், ஆட்டுக்கிடா வாகனம், பஞ்சமூர்த்திகள் சப்பரம், யானை வாகனம், காமதேனு வாகனம், வெள்ளிக் குதிரை வாகனம் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் சுவாமி எழுந்தருளி வீதிஉலா காட்சி நடைபெறுகிறது.

முக்கிய நிகழ்வான திருக்கார்த்திகை தினத்தன்று (13ந்தேதி) காலை 9 மணிக்கு தேர் வடம் பிடித்தல் நிகழ்ச்சியும், இரவு 9 மணிக்கு தங்கமயில் வாகனத்தில் சுவாமி வீதிஉலா நிகழ்ச்சியும், தீபக்காட்சியும் வெகு விமரிசையாக நடைபெற உள்ளது.

பின்னர், 14ந்தேதி படிச்சட்டத்தில் சுப்பிரமணிய சுவாமி புறப்பட்டு காவிரியில் தீர்த்தவாரியும், இரவு அவளோ அவரோஹணம் படிச்சட்டத்தில் சுவாமி புறப்பாடும், 15ந்தேதி இரவு வள்ளி, தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமி யதாஸ்தானம் சேர்தல் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

விழா ஏற்பாடுகளை கோவிலின் இந்து சமய அறநிலை துறை இணை ஆணையர் சிவகுமார், துணை ஆணையர் உமா தேவி மற்றும் கண்காணிப்பாளர்கள், கோவில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

# மீட்புப் பணிகள் எதிரொலி: விழுப்புரம் மாவட்டத்தில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை

விழுப்புரம், டிச.5

ஃபெஞ்சல் புயல் மற்றும் கனமழை காரணமாக பல்வேறு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக இன்று மற்றும் நாளை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும்



காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மீட்புப் பணிகள் முழு வீச்சில் நடந்து வரும் நிலையில், விழுப்புரம் மாவட்டத்தில் நாளை பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை அளித்து மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

# மண் சரிவில் உயிரிழந்த 7 பேரின் உடலுக்கு அஞ்சலி செலுத்திய அமைச்சர் எ.வ.வேலு

திருவண்ணாமலை, டிச.5

திருவண்ணாமலையில் ஃபெஞ்சல் புயல் காரணமாக 2 நாட்களுக்கும் மேலாக இடைவிடாது பலத்த மழை பெய்தது. இந்த மழையானது, மலையையே அசைக்கும் அளவுக்கு வெளுத்து வாங்கியது.

இந்த நிலையில் அண்ணாமலையார் என பக்தர்களால் அழைக்கப்படும் மலையில் வ.உ.சி.நகர் பகுதிக்கு மேலே உள்ள ராட்சத பாறைகள் திடீரென பயங்கர சத்தத்துடன் உருண்டு கீழ்நோக்கி வந்தன. அதன் காரணமாக பாறைக்கு கீழே உள்ள மண் பெயர்ந்து அருவி போல ஆக்ரோஷமாக வ.உ.சி.நகர் வீடுகளை நோக்கி பொலபொலவென சரிந்ததில் 2 வீடுகளுக்குள் புகுந்து அந்த வீடுகளே மண்ணுக்குள் புதைந்தன. அதுமட்டுமின்றி அத்துடன் பாறைகளும் அடுத்தடுத்து வீட்டின் மீது விழுந்தன

அப்போது ஒரு வீட்டில் இருந்தவர்கள் வெளியேறி விட்டனர். மற்றொரு வீடு கண் இமைக்கும் நேரத்தில் மண் சரிவில் சிக்கியது.

இந்த மண் சரிவில் புதைந்து 7 பேர் பரிதாபமாக இறந்தனர். 5 பேரின் உடல்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன. மீதமுள்ள 2 பேரின் உடல்கள்



நேற்று மீட்கப்பட்டது.

பிரேத பரிசோதனை நிறைவடைந்த பின்னர் 7 பேரின் உடல்களும் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இறந்தவர்களின் உடல்களை கண்ட அவர்களது உறவினர்கள் கதறி அழுதனர். அது காண்போர் அனைவரின் கண்களையும் கலங்க செய்தது.

இந்நிலையில் மண் சரிவில் உயிரிழந்த 7 பேரின் உடலுக்கு அமைச்சர் எ.வ.வேலு, துணை சபாநாயகர் பிச்சாண்டி அஞ்சலி செலுத்தினர்.

7 பேரின் உடலை பார்த்து அமைச்சர் எ.வ.வேலு கண் கலங்கினார். உயிரிழந்த 7 பேரின் உறவினர்களுக்கு அவர் ஆறுதல் கூறினார்.

# கஞ்சா வழக்கில் நடிகர் மன்சூர் அலிகான் மகன் கைது

சென்னை, டிச.5

மெத்தம்பெட்டமைன் மற்றும் மேஜிக் காளானை பயன்படுத்தியது தொடர்பாக நடிகர் மன்சூர் அலிகான் மகன் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அலிகான் துக்ளக், சேது ஷாயி, முகமது ரியாஸ் அலி, பைசல் அகமது உள்ளிட்ட 4 பேரிடமும் இரண்டாவது நாளாக திருமங்கலம் காவல்நிலையத்தில் வைத்து தனிப்படை போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

2019ம் ஆண்டு நடிகர் மன்சூலின் அலிகான் இயக்கத்தில் உருவான படத்தில் அலிகான் துக்ளக் கதாநாயகனாக நடித்துள்ளார். இதனிடையே கடந்த மாதம் 3ந்தேதி போலீசாரால் கைதுசெய்யப்பட்ட கார்த்திகேயன் என்பவரிடம் இருந்து ஆன்லைனில் கஞ்சா வாங்கி பயன்படுத்தியது மட்டுமில்லாமல் விற்பனையில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது. மேலும் நேற்றும் மேஜிக் காளான், மெத்தம்பெட்டமைன் உள்ளிட்ட போதைப் பொருட்களை அலிகான் துக்ளக் பயன்ப



டுத்தியது விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஏற்கனவே ஜெ.ஜெ.நகர் போலீசாரால் தனியார் கல்லூரி மாணவர்கள் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் நடைபெற்ற விசாரணையில் ஆன்லைனில் கஞ்சா பயன்படுத்தி வந்ததோடு அதிக விலைக்கு விற்பனைக்கு செய்து வந்ததாக தெரியவந்தது.

இதனிடையே கைதானவர்களுக்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் அலிகான் துக்ளக் கஞ்சா பயன்படுத்தி உள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளதாக போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து கைதானவர்களிடம் 2வது நாளாக விசாரணை நடைபெற்றது.

# வெள்ள நிவாரணத்தை உயர்த்தி வழங்க வேண்டும் ஜி.கே.வாசன் வலியுறுத்தல்

சென்னை, டிச.5

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

அதி கனமழையால் கடுமையாக பாதிக்கப்பட்ட மாவட்ட மக்களுக்கு ரூ. 2,000, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூ.5,00,000, சேதம்அடைந்த மானாவாரி பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.8,500, சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ. 10,000, 33 சதவீதம் அல்லது அதற்கு மேல் சேதமடைந்த நெற்பயிர் உள்ளிட்ட இறவை பாசனப் பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூ. 17,000, சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ. 10,000, எருது, பசு உள்ளிட்ட கால்நடைகளின் உயிரிழப்புக்கு ரூ. 37,500 என நிவாரணத் தொகையை அறிவித்திருப்பது போதுமானதல்ல. காரணம் கடன் வாங்கி விவசாயம் செய்த, கால்நடைகளை வளர்த்த விவசாயிகளுக்கு முதலீட்டை கணக்கிட்டால் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணம் சரியல்ல. தமிழக அரசு மழை வெள்ள புயல் பாதிப்பால் மிகவும் சிரமத்தில் இருக்கும் விவசாயி கள், கால்நடை வளர்ப்பவர்கள் என பாதிப்புக்குள்ளான அனைத்து தரப்பு மக்களின் வருங்கால விவசாயம், தொழில் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு நிவாரணத்தை உயர்த்தி முறையாக, முழுமையாக காலத்தே வழங்க வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் கேட்டுக்கொள்கிறேன் இவ்வாறு அவர் கூறி உள்ளார்.


# பழனி கோவிலில் நவபாஷாண சிலையை ஆய்வு செய்த முன்னாள் நீதிபதி தலைமையிலான குழுவினர்

பழனி, டிச.5

அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவிலுக்கு தமிழகம் மட்டுமின்றி உலகம் முழுவதிலுமிருந்து பக்தர்கள் நாள்தோறும் வருகை தருகின்றனர்.

இங்குள்ள கருவறையில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு போகரால் உருவாக்கப்பட்ட நவபாஷாண சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு பக்தர்களால் வணங்கப்படுகிறது. இது பழனி மலை முருகனின் தனிச்சிறப்பாகும்.

நவபாஷாண சிலை குறித்து பல்வேறு சர்ச்சையான கருத்துகள் வெளி வந்த நிலையில் சிலையின் உறுதிதன்மை குறித்து



ஆய்வு செய்ய சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை சார்பில் சிறப்புக் குழுவை அமைக்க உத்தரவிட்டது.

அதன்படி ஓய்வு பெற்ற நீதிபதி பொன் காளியப்பன்தலைமையில்ஐ.ஐ.டி. குழுவினர் ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டனர். அதன்படி இன்று பழனி கோவிலுக்கு வந்த முன்னாள் நீதிபதி பொன் காளியப்பன், ஸ்தபதி தட்சிணாமூர்த்தி கொண்ட குழுவினர் இது குறித்து தேவஸ்தான நிர்வாகிகளிடம் எடுத்துக் கூறினர்.

இதனைத் தொடர்ந்து கால பூஜைகளுக்கு பின்பு சிறப்பு யாகம் நடத்தப்பட்டு அந்தக்குழுவினர் கருவறைக்குள் சென்று சோதனை நடத்தினர். கருவறைக்குள் சுமார் 30 நிமிடத்துக்கும் மேல் சோதனை நடத்தப்பட்டது.

இதனால் தரிசனத்துக்கு காத்திருந்த பக்தர்களுக்கு சுமார் 40 நிமிடம் தடைவிதிக்கப்பட்டது. சோதனை முடிந்த பிறகு அதிகாரிகள் தங்களது அறிக்கையை தாக்கல் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. கருவறைக்குள் நவ பாஷாண சிலையை அதிகாரிகள் ஆய்வு செய்த சம்பவம் பக்தர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது.

# புயல் பாதிப்பு சட்டசபை தேர்தலில் எதிரொலிக்கும் வானதி சீனிவாசன்

கோவை, டிச.5

பா.ஜ.க. தேசிய மகளிர் அணி தலைவி வானதி சீனிவாசன் எம்.எல்.ஏ. கூறியிருப்பதாவது: விழுப்புரம் மாவட்டம் இருவேலம்பட்டு பகுதியில் மழை நிவாரணம் கேட்டு போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களிடம் அமைச்சர் பொன்முடி காருக்குள் அமர்ந்தபடி பேசி உள்ளார். கோபம் அடைந்த மக்கள் காரை விட்டு இறங்கி வர மாட்டீர்களா என கூறி அவர் மீது சேற்றை வீசி உள்ளனர். நிர்வாக திறனற்ற, மக்கள் நலனில் அக்கறை இல்லாத தி.மு.க. அரசால் பெருமழை பாதிப்பில் இருந்து மீள முடியாமல் மக்கள் தவிக்கிறார்கள். முதலமைச்சர் தொடங்கி அமைச்சர்கள் வரை அனைவரும் சில இடங்களுக்குச் சென்று புகைப்படம், வீடியோ எடுத்து விளம்பரம் செய்து மக்களை ஏமாற்றுகின்றனரே தவிர, உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கவில்லை. இதனால் தி.மு.க. அரசு மீது தமிழ்நாட்டு மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர். கடந்த மூன்றரை ஆண்டுகால தி.மு.க. அரசுக்கு மக்கள் வழங்கிய சான்றிதழ் தான் இந்த சம்பவம். இனியாவது அமைச்சர்கள் உள்ளிட்ட தி.மு.க.வினர் மக்களை மதிக்க வேண்டும். உணவு, குடிநீருக்காக போராடும் மக்களிடம் காருக்குள்ளேயே அமர்ந்துகொண்டு பேசுவதை தி.மு.க. அமைச்சர்கள் தவிர்க்க வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் இந்த கோபம், 2026ல் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் எதிரொலிக்கும். தி.மு.க. ஆட்சி வீட்டுக்கு அனுப்பப்படும். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தருமபுரி, கிருஷ்ணகிரி வருகை ரத்து



கிருஷ்ணகிரி, டிச.5

தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஸ்டாலின் தருமபுரி, கிருஷ்ணகிரி வருகை, வெள்ள பாதிப்புகளால் ரத்ததானது.

தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நாளை (5ந்தேதி) கிருஷ்ணகிரி அருகே நடக்கும், தி.மு.க.வினர் இல்ல நிகழ்ச்சிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்க வருவதாக இருந்தது. இதற்காக அவரை வரவேற்று, கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க.வினர் பேனர்கள், கொடி கம்பங்களுடன், சுவர் விளம்பரங்களை எழுதினர். உதயநிதிஸ்டாலின்நிகழ்ச்சியை தயார் செய்யும் பணியில், அரசு அலுவலர்களும் ஈடுபட்டு, அரசு சார்பில் முடிவுற்ற பணிகள், நடந்து வரும் பணிகள் குறித்து அறிக்கைகளும் கேட்கப்பட்டு இருந்தன.

தமிழக துணை முதலமைச்சராக பொறுப்பேற்று முதன் முதலில், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தரும் உதயநிதி ஸ்டாலினை தடபுடலாக வரவேற்க, தி.மு.க.வினர் பல்வேறு முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில் 'ஃபெஞ்சல்' புயலால், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கடந்த, 4 நாளாக மழை பெய்து கடும் சேதம் ஏற்பட்டது. துணை முதலமைச்சர் உதயநிதி நேற்று முன்தினம் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில்வெள்ளபாதிப்பு பகுதிகளை நேரில் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மீட்பு பணிகள், வெள்ள பாதிப்புகளை கணக்கிடும் பணி, நிவாரணம் குறித்து அறிக்கைகள் சமர்பிக்கும் பணிகளில், அரசு அலுவலர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நாளை, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும், நாளை மறுநாள் (6ந் தேதி) தருமபுரி மாவட்டத்திற்கும் வருகை தந்து நலத்திட்ட உதவிகள் வழங்க வாய்ப்பில்லை எனவும், பின்னர் அந்த நிகழ்ச்சிகள் நடத்தப்படலாம் எனவும், அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



மேட்டூர், டிச.5

கர்நாடக மாநிலத்தில் உள்ள காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி ஆகிய அணைகளுக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இந்த அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் உபரி நீர் தமிழகத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது.

இதனிடையே தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இரவு நேரங்களில் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. இதனால் மேட்டூர் அணைக்கு கடந்த சில தினங்களாக நீர் வரத்து அதிகரித்தப்படி உள்ளது.

நேற்று முன்தினம் வினாடிக்கு 7,414 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலையில் 9,246 கன அடியாக அதிகரித்தது. தொடர்ந்து நேற்று இரவு 29,021 கன அடி தண்ணீர் மேட்டூர் அணைக்கு வந்தது.

மேலும் இன்று காலையில் நீர்வரத்து அதிகரித்து வினாடிக்கு 32,240 கன அடி தண்ணீர் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து காவிரி ஆற்றில் வினாடிக்கு 1000 கன அடியும், கிழக்குமேற்கு கால்வாய் பாசனத்திற்கு 300 கன அடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது. நேற்று 111.39 அடியாக இருந்த நீர்மட்டம் இன்று காலை 8 மணிக்கு நீர்மட்டம் 113.39 அடி உயர்ந்துள்ளது. நீர் இருப்பு 83.05 டி.எம்.சி.யாக உள்ளது.

## 22 ஆண்டுகளுக்கு பிறகு ஏரி நிரம்பியதால் கிராம மக்கள் கிடாவெட்டி கொண்டாட்டம்



மொரப்பூர், டிச.5

தருமபுரி மாவட்டம் மொரப்பூர் அருகே உள்ளது எம்.வேட்ரப்பட்டி கிராமம். இந்த கிராமத்தில் வேட்டையன் ஏரி உள்ளது. இந்த ஏரியில் தண்ணீர் நிரம்பினால் அதன் மூலம் சுமார் 200க்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்கள் குடிநீருக்கும், பாசனத்திற்கும் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால் கடந்த 22 ஆண்டுகளுக்கு முன்பு வேட்டையன் ஏரி நிறைந்தது. அதன் பிறகு ஏரிக்கு தண்ணீர் வரத்து இல்லாமல் காய்ந்து போனது. இதனால் பொதுமக்களும் விவசாயிகளும் தண்ணீருக்கு மிகுந்த சிரமப்பட்டு வந்தனர். இந்த நிலையில் கடந்த சில தினங்களாக மொரப்பூர் மற்றும் இதன் சுற்றுவட்டார பகுதிகளில் பெய்த கனமழையால் வேட்டையன் ஏரி 22 ஆண்டுகளுக்குப் பிறகு தண்ணீர் நிரம்பியதால் கிராம மக்கள் ஆடுவெட்டி கொண்டாடினார்கள். இந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

## அதிமுக ஆட்சியில் சிங்காரத்தோப்பு பாலம் கட்டும்போதே இடிந்து விழுந்தது: இபிஎஸ்க்கு அமைச்சர் பதிலடி



சென்னை, டிச.5

திமுக ஆட்சியில் கட்டிய பாலங்கள் எவ்வளவு தரமற்றவை என்பதற்கு அடித்துச்செல்லப்பட்ட பாலங்கள் சாட்சி என அதிமுக பொதுச் செயலாளரும் எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டி இருந்தார்.

இந்நிலையில் பொதுப் பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர்கூறியதாவது:

★ திமுக பொறுப்பேற்று 1505 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. 328 பாலப்பணிகள் நடைபெறுகிறது.

★ அதிமுக ஆட்சியில் முடிக்காது நீண்ட நாள் நிலுவையிலிருந்த 38 ரெயில்வே மேம்பாலங்கள் திமுக ஆட்சியில் கட்டப்பட்டது.

★ எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் மட்டும் 7 பாலங்கள் கட்டி உடனே இடிந்து விழுந்த வரலாறும் உண்டு.

★ அதிமுக ஆட்சியில் கடலூர் சிங்காரத்தோப்பு பாலம் கட்டும்போதே இடிந்து விழுந்தது.

★ எதிர்க்கட்சித்தலைவர் தன் இருப்பிடத்தை காட்டிக்கொள்ள ஈரை பேன்ஆக்கமுயற்சிக்கிறார் என்று கூறினார்.

## தூத்துக்குடி அருகே வாலிபர் வெட்டிக் கொலை

தூத்துக்குடி, டிச.5

தூத்துக்குடி புதுக்கோட்டை அருகே கூட்டாம்புளி பொன்நகரை சேர்ந்தவர் வெள்ளக்கண்ணு (வயது 23). இவரது தந்தை முருகேசன் கூட்டாம்புளி பிரதான சாலையில் இரும்பு கடை நடத்தி வருகிறார்.

வெள்ளக்கண்ணுவுக்கும் அப்பகுதியை சேர்ந்த சிலருக்கும் முன்விரோதம் இருந்து வந்துள்ளது. இந்நிலையில் இன்று காலை வீட்டின் முன்பாக வெள்ளக்கண்ணு நின்று கொண்டிருந்தார்.

அப்போது அங்கு கும்பலாக வந்த 5க்கும் மேற்பட்டவர்கள் வெள்ளக்கண்ணுவை சுற்றி வளைத்து அரிவாளால் சரமாரியாக வெட்டிக் கொலை செய்தனர்.

அப்போது வெள்ளக் கண்ணுவின் அலறல் சத்தம் கேட்டு வீட்டினுள் இருந்து வெளியே ஓடி வந்த அவரது தம்பி, வெள்ளக்கண்ணுவை கும்பல் தாக்குவதை தடுக்க முயன்றார்.

அப்போது அவரையும் கும்பல் அரிவாளால் வெட்டியது. இதில் அவரும் படுகாயம் அடைந்தார். பின்னர் அந்த கும்பல் அங்கிருந்து தப்பி சென்று விட்டனர்.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஆல்பர்ட் ஜான், ரூரல் டி.எஸ்.பி. சுதிர், இன்ஸ்பெக்டர் வனசுந்தர், சப்இன்ஸ்பெக்டர் ஞானராஜ் மற்றும் போலீசார் விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

வெள்ளக்கண்ணுவை கொலை செய்த கும்பல் யார்? முன்விரோதம் காரணமாக இந்த கொலை நடந்ததா? என பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக அந்த பகுதியில் உள்ள சி.சி.டி.வி. காட்சிகளையும் ஆய்வு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது



திருவண்ணாமலை, டிச.5

திருவண்ணாமலையில் வருகிற 13ந்தேதி கார்த்திகை தீபத் திருவிழா மகா தீபம் ஏற்றப்படுகிறது.

இதனையொட்டி திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கடந்த 1ந் தேதி காவல் தெய்வமான துர்க்கை அம்மன் உற்சவம், தொடர்ந்து பிடாரி அம்மன், விநாயகர் உற்சவம் நடந்தது.

கார்த்திகைதீபதிருவிழா கொடியேற்றம் நடந்தது. அருணாசலேஸ்வரர் சன்னதி முன்பு உள்ள 64 அடி உயரம் கொண்ட தங்க கொடி மரத்தில் காலை 6.25 மணி அளவில் சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க அண்ணாமலையாருக்கு அரோகரா என்ற கோஷத்துடன் கொடியேற்றம் நடைபெற்றது.

முன்னதாக அண்ணாமலையார் உண்ணாமலை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனை நடந்தது. கொடிமரத்தின் அருகே அண்ணாமலையார் உண்ணாமலை அம்மன், பராசக்தி அம்மன், விநாயகர், முருகர், சண்டிகேஸ்வரர் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தனர்.

இதனை தொடர்ந்து 10 நாட்கள் காலை இரவு என இருவேளையில் சாமி மாடவீதி உலா நடைபெறுகின்றன.

வருகிற 10ந்தேதி மகா தேரோட்டம் நடைபெறும். கார்த்திகை தீபத் திருவிழாவின் உச்சநிகழ்வான மகாதீபம் 13ந்தேதி ஏற்றப்படுகிறது.

13ந்தேதி (வெள்ளிக்கிழமை) அதிகாலை 4 மணிக்கு அருணாசலேஸ்வரர் கோவிலில் பரணி தீபம் ஏற்றப்படுகிறது. மாலை 6 மணிக்கு ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே காட்சி தரும் அர்த்தநாரீஸ்வரர் தங்க கொடிமரம் முன்பு எழுந்தருள்வார். அப்போது 2,668 அடி உயரமுள்ள மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படும்.

13ந்தேதி முதல் 11 நாட்களுக்கு மலை உச்சியில் அண்ணாமலையார் ஜோதிப்பிழம்பாக காட்சி தருவார். கார்த்திகை தீபத் திருவிழாவில் சுமார் 40 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாவட்ட நிர்வாகம் மற்றும் இந்து சமய அறநிலைத்துறையின் சார்பில் பல்வேறு முன்னேற்பாடு பணிகள் பக்தர்களின் வசதிக்காக செய்யப்பட்டுள்ளன.

இன்று காலை நடைபெற்ற கொடியேற்று விழாவில் வழக்கத்தை விட அதிகமான பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, கலெக்டர் பாஸ்கர பாண்டியன், போலீஸ் சூப்பிரண்டு சுதாகர், உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## புயல், பேரிடரின் போது தற்காலிக நிவாரணம் கொடுத்துவிட்டுப் போவதுதான் தீர்வா? விஜய்

சென்னை, டிச.5

ஃபெஞ்சல் புயல் தமிழகத்தின் பல மாவட்டங்களில் பெரும்பாதிப்புகளை ஏற்படுத்தி இருக்கிறது. புயல் பாதிப்பில் சிக்கியவர்களுக்கு அரசியல் தலைவர்கள் நேரில் சந்தித்து நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றனர். மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்குவிரைந்து நிவாரணத் தொகை வழங்கவும் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், புயல் பாதிப்பு காலத்தில் தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து த.வெ.க. தலைவர் விஜய் பல்வேறு கேள்விகளை முன்வைத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "புயல், எப்போதும் பேரிடரையும் பெரும் பாதிப்பையும் மக்களுக்கு உண்டாக்கும் ஓர் இயற்கைச் சீற்றமே. அதில் இருவேறு கருத்துக்கு இடமே இல்லை. இருப்பினும் எவ்வளவு பெரிய புயல், இயற்கைப் பேரிடர் வந்தாலும் நம்மைக் காக்க, நாம் வாக்களித்துத் தேர்ந்தெடுத்த அரசு இருக்கிறது, ஆட்சியாளர்கள் உள்ளனர் என்ற நம்பிக்கையுடன் தான் மக்கள் இருப்பர்."

"ஆனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசோ, ஆட்சி பீடமோ, ஆபத்தான ஒவ்வொரு சூழலிலும் மக்களைக் கைவிடும் என்பதை அனுபவித்து உணர்கிறபோது, அம்மக்களின் தாங்கொணாத் துயரை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. நமக்குப் பாதுகாப்பாக இருப்பார்கள் எனப் பரிபூரணமாக நம்பி வாக்களித்து, அதிகாரத்தில் அமர்த்தி அழகு பார்த்த மக்களைப் பாதுகாக்க, முறையான திட்டங்களைத் தீட்டவில்லை. குறைந்தபட்ச பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கூடச் செய்யாமல் அவர்களைக் கையறு நிலையில் பரிதவிக்க விடும் சுயநல ஆட்சியாளர்களை என்னவென்று சொல்ல?"

"மக்கள் துன்புறும் வேளையில் ஆட்சியாளர்களைக் குறிவைத்துக் குறைகூறி மட்டுமே அரசியல் செய்யும் கலாச்சாரத்தை நாம் பின்பற்றப் போவதில்லை என்கிற தீர்க்கமான முடிவை எடுத்திருக்கிறோம். ஆயினும் மக்கள் பக்கம் எப்போதும் நின்று அவர்களுக்காகக் குரல் கொடுத்து நிற்பதே நமது மக்களரசியல் நிலைப்பாடு என்பதால் இதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்."

"ஒவ்வொரு வருடமும் வரும் புயல் மற்றும் பேரிடரின் போது வருடாந்திர சம்பிரதாய நிகழ்வாக ஓரிரு நாட்கள் பாதிக்கப்பட்ட மக்கள் சிலரை ஆட்சியாளர்கள் சந்தித்துப் புகைப்படம் எடுத்துவிட்டு, தற்காலிக நிவாரணம் கொடுத்துவிட்டுப் போவதுதான்தான்தீர்வா? அந்த நேரத்துக்கான தீர்வைத் தந்துவிட்டதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்துவதும் மக்கள் துன்பத்தை ஒருநாள் சம்பிரதாயம் போல நினைத்து அன்றோடு மறந்துவிடுவதும் எந்த வகையில் நியாயம்?"

"மழை வெள்ளம் போன்ற பேரிடர்க் காலங்களில்மக்களுக்கானஅடிப்படைப் பாதுகாப்புத் தேவைகளைநிறைவேற்ற வேண்டிய தார்மீகமான தலையாய கடமை, முதலில் ஆட்சியாளர்களுக்கே இருக்கிறது. ஆனால் ஆட்சியாளர்கள் இதை முழுவதுமாகவே மறந்துவிடுகின்றனர்."

"மக்களைப் பாதுகாப்பாக இருக்க வைப்பதற்கான நிரந்தரத் தீர்வை நோக்கி நகர்வது குறித்து அவர்கள் எள்ளளவும் சிந்திப்பதில்லை. காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர்ப் பாதுகாப்புச் சார்ந்து எந்த ஒரு முன்னெடுப்பையும் எடுப்பதில்லை. வெறும் தற்காலிகக் கண்துடைப்பு அறிவிப்புகளைச் செய்வதில் மட்டுமே முனைப்புடன் இருக்கின்றனர். இவ்வாறு செய்வதையே ஆட்சியாளர்கள் வாடிக்கையாகக் கொண்டிருப்பது உண்மையிலேயே வேதனையைத் தருகிறது."

"எவ்வகையிலாவது மக்களை ஏமாற்றி ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்றும் எல்லாவற்றையும் மக்கள் மறந்துவிடுவர் என்றும் மமதையில் இருந்த எவரும் மக்கள் மன்றத்தில் நீடித்து நிலைத்ததே இல்லை என்பதுதான் வரலாறு. எது நடந்தாலும் எப்போதும் போல எதிர்க்கட்சிகள் மீது ஏளனமாக விமர்சனம் வைத்து, காவி வர்ணம் பூசி, கபட நாடகமாடித் தப்பித்துக்கொள்ளலாம் என்று தற்போதைய ஆட்சியாளர்கள் எம் மக்களை நிரந்தர நிர்க்கதிக்கு ஆளாக்கி வருகின்றனர். இந்த அடாத முயற்சிகள் அனைத்தும் மக்கள் சக்திக்கு முன்பு தோற்றுப் போகும் என்பதை இனிவரும் காலங்கள் கண்டிப்பாக உணர்த்தவே செய்யும்."

"இந்த இயற்கைப் பேரிடர்க் காலத்தில், தமிழகத்திலும் புதுவையிலும் உள்ள நம் தமிழக வெற்றிக் கழகத் தோழர்களுக்கு ஒரு வேண்டுகோள்."

"கடந்த பல வருடங்களாக நாம் நற்பணி மன்றமாக, மக்கள் இயக்கமாக இருந்தபோது, இயன்ற அளவில் நம் மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்தோம். மக்களுக்கு ஆறுதலாகவும் ஆதரவாகவும் உறுதுணையாகவும் இருந்தோம். நம் சேவை உணர்வால் அவர்களோடு உறவாகப் பழகியவர்கள் நாம்."

"என் நெஞ்சில் குடியிருக்கும் கழகத் தோழர்களாகிய நீங்கள், உண்மையான மக்கள்பணி செய்யும் நேரம் இதுவே என்பதை ஆட்சியாளர்களுக்கும் உணர்த்தி வருகிறீர்கள். அவ்வகையில் இந்தப் பேரிடர் தொடங்கிய நாள் முதல் தற்போது வரை, பாதிப்பிற்கு உள்ளான அனைத்து மாவட்டங்களிலும் நீங்கள் களத்தில் நின்று இரவு பகல் பாராமல் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகிறீர்கள் என்பதை நான் நன்கறிவேன். மேலும் வீடு வீடாகச் சென்று குடிநீர், பால், பிஸ்கட், உணவு, ரொட்டி, மளிகைப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய அடிப்படைத் தேவைகளை வழங்கி வரும் உங்களின் அளப்பரிய பங்களிப்பைக் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்தேன்."

"பல மாவட்டங்களில் வெள்ளநீர்வடியவில்லை. மக்களின் வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இன்னமும் இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை. இந்தச் சூழ்நிலையில், மேலும் சில மாவட்டங்களில் கன மழை தொடரும் என வானிலை ஆய்வு மையம் தினந்தோறும் எச்சரிக்கை விடுத்து வருகிறது."

"எனவே நம் கழகத் தோழர்கள், தங்களின் பாதுகாப்பை முழுமையாக உறுதி செய்து கொண்ட பிறகே, பேரிடர்ப் பணிகள் மற்றும் உதவிகளைச் செய்ய வேண்டும். பாதிப்பிற்கு உள்ளான அனைத்து மாவட்டங்களிலும், அனைத்துப் பகுதிகளிலும் வெள்ள நீர் முழுவதுமாக வடியும் வரை, பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க வேண்டும். நம் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் நாம் அனைவரும் மக்களோடு மக்களாக கக்கரம்கோத்துநிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்றும் உங்களைப் பேரன்புடன் கேட்டுக் கொள்கிறேன்," என்று குறிப்பிட்டுள்ளார்.

## சென்னை மெரினாவில் ரோப் கார் சேவை மாநகராட்சி அறிவிப்பு



சென்னை, டிச.5

சென்னையின் முக்கிய பொழுதுபோக்கு இடமாக திகழும் மெரினா கடற்கரை, மக்களை கவரும் வகையில் உள்ளது. காலை, மாலை நேரங்களில் கடற்கரைக்கு தினமும் ஏராளமான மக்கள் பொழுதுபோக்க வருகின்றனர்.

குறிப்பாக, வார இறுதி நாட்களில் பல ஆயிரம் பேர் இங்கு குடும்பத்துடன் வந்து செல்கின்றனர். ஆண்டுக்கு பல லட்சம் பேர் வந்து செல்லக்கூடிய இந்த கடற்கரைக்கு இன்னமும் கூடுதலாக வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்பதும், உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய கடற்கரையான மெரினாவை மேலும் அழகுப்படுத்த வேண்டும் என்பதும் நீண்டநாள் கோரிக்கையாக உள்ளது.

சென்னை மாநகராட்சி 'சிங்கார சென்னை 2.0' திட்டத்தின் கீழ் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்நிலையில் சென்னை மெரினாவில் ரோப் கார் சேவைக்கான கட்டுமான பணிகளுக்கு டெண்டர் கோரி, சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

வருகிற 17ந் தேதிக்குள் டெண்டருக்கு இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என மாநகராட்சி அறிவித்துள்ளது.

வடிவமைப்பு, தொழில்நுட்ப அம்சங்கள் உட்பட விரிவான அறிக்கை, மதிப்பாய்வு உள்ளிட்டவற்றை அளிக்குமாறும்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## வேலூரில் லாரி மீது ஜீப் மோதிய விபத்தில் 3 பேர் பலி



வேலூர், டிச.5

வேலூர் மாவட்டம் கருகம்பத்தூர் பகுதியில் இன்று அதிகாலையில் லாரி மீது ஜீப் மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

கொணவட்டம் பகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் கட்டுப்பாட்டை இழந்த ஜீப், சர்வீஸ் சாலையில் நின்ற லாரியின் மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் ஜீப்பில் பயணித்த 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், படுகாயத்துடன் ஒருவர் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்தில் உயிரிழந்தவர்கள் சென்னை மணலி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது. விபத்து குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அகழாய்வில் மணிகள், சங்கு வளையல்கள் கண்டெடுப்பு



விருதுநகர், டிச.5

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அருகே உள்ள விஜயகரிசல்குளத்தில் 3ம் கட்ட அகழாய்வு பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. அகழாய்வில் இதுவரை ஆட்டக்காய்கள், சுடுமண் முத்திரைகள், செப்பு காசுகள், செவ்வந்திக்கல், மண் பாண்ட பொருட்கள், சுடுமண்ணால் செய்யப்பட்ட உருவ பொம்மைகள், ஆபரணங்கள் உள்பட சுமார் 2,600க்கும் மேற்பட்ட பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு உள்ளன.

இந்த நிலையில், வெம்பக்கோட்டை அகழாய்வில் சங்கு வளையல்கள், சுடுமண்ணால் செய்த அலங்கார மணிகள் நேற்று கிடைத்தன. மேலும் முதல் இரண்டு கட்ட அகழாய்வுகளைவிட 3ம் கட்ட அகழாய்வில் சுடுமண்ணால் செய்யப்பட்ட மணிகள், செப்புக் காசுகள் அதிகளவில் கிடைத்து உள்ளன. இந்த செப்புக்காசுகள் ஆய்வுக்கு அனுப்பப்பட இருப்பதாக அகழாய்வு இயக்குனர் பொன் பாஸ்கர் தெரிவித்தார்.

தினகனி

5.12.2024

# உலகாப்பம்பாளையம் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவர்களின் ஆபத்தான பயணம்

நாமக்கல், டிச.5

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் எலச்சிபாளையம் ஒன்றியம் உஞ்சனைகிராமத்தில் அமைந்துள்ள உலகாப்பம்பாளையம் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவர்கள் மாலை நேரத்தில் வீட்டுக்கு திரும்பும் பொழுது உலகாப்பம்பாளையம் பேருந்து நிலையத்தில் இருந்து பஸ் ஏறும் பொழுது ஒழுங்கான முறையில் பஸ்ஸில் உள்ளே சென்று அமர்வது இல்லை எத்தனை பேர் இருந்தாலும் படிக்கட்டில் தொங்கும் வண்ணமே தொடர்கிறது பள்ளி தலைமை ஆசிரியர்கண்டு கொள்ளாத மாணவர்களை எப்படி பாதுகாப்பாக வீடு வந்து சேருவார்கள் என்று பெற்றோர்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது

பேருந்துஏறும்பொழுது பஸ் ஸ்டாப்பில் இருக்கின்ற பொதுமக்கள் எத்தனையோ முறையில் பள்ளி மாணவர்களை பார்த்து உள்ளே செல்லுங்கள் படிக்கட்டில் தொங்காதீர்கள் என்று பள்ளி மாணவர்களை பார்த்து பொதுமக்கள் பலமுறை அறிவுரை சொல்லி இருக்கிறார்கள் படிக்கட்டில் தொங்கும் வண்ணம் தொடர்ச்சியாக ஏற்படுகிறது தலைமை ஆசிரியர்கள் பள்ளி விட்ட பிறகு மாலை நேரங்களில் கிளாஸ் டீச்சர் மூலமாக பத்து

நிமிடம் பேருந்து நிலையத்தில் நின்று அவர்களை ஒழுங்குப்படுத்தி பஸ் ஏறிச் செல்லுமாறு அறிவுரை சொல்லி அனுப்பினால் நன்றாக இருக்கும் என்று பெற்றோர்களினுடைய பொது மக்களுடைய எதிர்பார்ப்பு இருக்கிறது




இப்பள்ளியில் ஏற்கனவே தலைமை ஆசிரியராக பணியாற்றிய பால்கர் வகுப்பாசிரியர்களை கொண்டு மாலை நேரங்களிலே பேருந்தில் செல்லும் மாணவர்களை ஒழுங்குப்படுத்தி வரிசையில் சென்று அறிவுரைகூறி முந்தித் கொள்ளாமல் பாதுகாப்பான முறையில் உள்ளே இருக்கையில்

அமர்ந்து பயணத்து செல்லுங்கள் என்று அறிவுரை சொன்னார்கள் இது உலகாப்பம்பாளையம் பேருந்துநிலையத்தில் இருக்கின்ற பொதுமக்களுக்கும் தெரியும் பெற்றோர்களுக்கும் தெரியும் சமூக ஆர்வலர்களுக்கும் தெரியும் தற்போதைய தலைமை ஆசிரியர் கருப்பண்ணன் இதை கண்டு கொள்ளாத வண்ணம் பெற்றோர்கள் மத்தியில் பொதுமக்கள் மத்தியில் மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்துகிறது பள்ளி மாணவர்கள் படிக்கட்டில் நின்று பயணம் செய்வது சந்தோசமாக பந்தாவாக நினைக்கிறார்கள் ஆனாலும் அந்தப் பயனும் மரணத்தை நோக்கி சென்று விடும் என்ற அச்சமும் பயமும் மாணவர்கள் மத்தியில் இல்லை

பத்து நிமிடம் பேருந்து நிலையத்தில் நின்று தலைமையாசிரியர் தலைமையில் வகுப்பு ஆசிரியர்கள் கொண்டு ஒழுங்குப்படுத்தி மாணவர்களை அனுப்பினால்

பள்ளி மாணவர்களின் பயணம் பாதுகாக்க முடியும்பெற்றோர்களும்அரசினர் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களை அனுப்புவதற்கும் நம்பிக்கையாக ஏற்படும் வருங்காலங்களில் தலைமை ஆசிரியர் பள்ளி மாணவர்களை பாதுகாப்பு அனுப்புவதற்கு முன் வருவாரா என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

# மிளகாய் பொடி தூவி, கொதிக்கும் எண்ணெய் ஊற்றி." கணவனுக்குக்கு நேர்ந்த கொடூரம்..

நாமக்கல் ,டிச.5

மிளகாய் பொடி தூவி, கொதிக்கும் எண்ணெய் ஊற்றி." குழந்தைகளை பார்க்க வந்த தந்தைக்கு நேர்ந்த கொடூரம்.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் பகுதியில் அஜித்குமார் என்ற நபர் ஒருவர் வசித்து வருகிறார்.

இவருக்கு கடந்த சில வருடங்களுக்கு முன்பு, ராதா என்ற பெண் ஒருவருடன் திருமணம் முடிந்துள்ளது.

இந்த தம்பதிக்கு 2 குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில், கணவன் மனைவி இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் ராதா, தனது பிள்ளைகளை அழைத்துக்கொண்டு அவரது பெற்றோர் வீட்டிற்க்கு



சென்று விட்டார்.

இதற்கிடையில், சம்பவத்தன்று தனது மனைவி வீட்டில் வளர்ந்து வரும் தனது இரண்டுகுழந்தைகளையும் பார்க்க தந்தை அஜித்குமார் சென்றுள்ளார்.

தனது கணவன் வந்ததை அறிந்த ராதா, கதவை அடைத்து விட்டு உள்ளே சென்று, வானலியில் எண்ணையை கொதிக்க வைத்துள்ளார். மேலும், கிச்சனில் இருந்து மிளகாய் பொடியை எடுத்து வந்து, அவரது கணவரின் கண்களில் தூவி உள்ளார்.

இதனால் அஜித்குமார், கண் எறிவதாக கூறி அலறியுள்ளார்.

அப்போது ராதா, கொஞ்சம் கூட இரக்கம் இல்லாமல், கொதிக்கும் எண்ணெய்யை அவரது கணவர் மீது ஊற்றியுள்ளார்.

இதனால்அலறிதுடித்த அஜித்குமாரின் அலறல் சத்தம் கேட்டு, அக்கம் பக்கத்தினர்வந்துஅவரை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்தனர்.

மேலும் இந்த சம்பவம் குறித்து ராசிபுரம் காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# மொட்டை மாடியில் விபச்சாரம்? அவசர அவசரமாக பிடிக்க ஓடிய போலீஸ்.. திருப்பத்தூர் ஸ்பா சென்டரில் களேபரம்

திருப்பத்தூர், டிச.5

ஸ்பா சென்டர்கள் என்ற பெயரில் சிலர் பாலியல் தொழில்களில் செய்து வருவதும் அவர்களை போலீசார் கைது செய்து சிறையில் அடைப்பதும் தொடர்கதையாகி வருகிறது.

இந்தநிலையில் திருப்பத்தூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஸ்பா என்கிற பெயரில் பாலியல் தொழில் செய்து வருவதாக புகார்கள் வெளியான நிலையில், இது தொடர்பாக மிகுந்த பரபரப்பு சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

தமிழகத்தில் குற்றச்செயல்கள் எங்கு நடந்தாலும், யார் ஈடுபட்டாலும், அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று முதல்வர்ஸ்டாலின்காவல் துறைக்கு ஏற்கனவே உத்தரவிட்டிருக்கிறார்.. இதையடுத்து,தமிழகபோலீஸார் விழிப்புடன் செயல்பட்டு, குற்றச்செயல்களை தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

முக்கியமாக, போதைப்பொருள் விநியோகம் மற்றும் விற்பனையை தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறாரகள்.. வருகிறது. அதேபோல, தமிழகத்தின் பல இடங்களில் சட்டவிரோதமாக நடத்தப்படும் ஸ்பா மற்றும் மசாஜ் சென்டர்களிலும் சோதனைகநடத்தப்படுகின்றன.

புகார்கள்: அதுமட்டுமல்ல, தமிழகத்தின் சில சென்டர்களில் ரகசியமாக பாலியல் தொழில் நடப்பதாக போலீசுக்கு புகார்கள் வந்தவண்ணம் இருந்ததால், அனுமதியின்றி நடத்தப்படும் அந்த மசாஜ் சென்டர்களில் போலீசார் திடீர் சோதனை நடத்துவதுடன், பாலியல் தொழில் நடப்பது உறுதியானால், சம்பந்தப்பட்டவர்களை தயவு தாட்சண்யம் பார்க்காமல் கைது செய்து வருகின்றனர்.

அந்தவகையில், திருப்பத்தூர் மாவட்டத்திலும் ஒரு சம்பவம் நடந்துள்ளது.. திருப்பத்தூர், ஹவுசிங் போர்டு காந்தி சிலை எதிரே "ராயல் ரிச்" என்ற ஸ்பா செயல்பட்டு வருகிறது.. இந்த ஸ்பாவில் பாலியல் தொழில் நடப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்துள்ளது. எனவே, இந்த தகவலின் பெயரில் டிஎஸ்பி ஜெகநாதன் தலைமையில் 10க்கும் மேற்பட்டபோலீசார்,சோதனை நடத்துவதற்காக, "ராயல் ரிச்" ஸ்பாவுக்குள் திடீரென நுழைந்தனர்.

மொட்டை மாடி: வழக்கமாக ரெய்டு என்றாலே போலீஸாரை பார்த்ததுமே, சம்பந்தப்பட்டவர்கள் அங்கிருந்து தப்பித்து ஓடக்கூடும்.. அந்தவகையில், ஸ்பா கட்டிடத்தின் மொட்டை மாடியில், யாராவது ஒளிந்து கொண்டிருப்பார்களோ? என்று சந்தேகப்பட்டு, ஜெகன் (32) என்ற போலீஸ்காரர் அவசர அவசரமாக மொட்டை மாடிக்கு ஏறியிருக்கிறார்.

மொட்டை மாடி: மொட்டைமாடியிலிருந்து படிகட்டு உள்ள பகுதிக்கு சென்றபோது, அங்கு சமமானதரை இருக்கும் என்று எண்ணி கால் வைத்ருக்கிறார்.. ஆனால், எதிர்பாராத விதமாக கால் தவறி கீழே விழுந்துவிட்டார் ஜெகன்.. இதனால் வலி தாங்க முடியாமல் ஜெகன் அலறி துடித்தார்.. அவரது அலறலை கேட்டு, ஸ்பாவுக்குள் ரெயிடு நடத்தி கொண்டிருந்த போலீசார் பதறிப்போய், ரெய்டு நிறுத்துவதை அப்படியே விட்டுவிட்டு, மாடிக்கு ஓடினார்கள்..

தீவிர சிகிச்சை: அங்கே வலியால் துடித்து கொண்டிருந்த ஜெகனை மீட்டு, டி.எஸ்.பி வாகனத்தில் ஏற்றிக்கொண்டு, திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு ஓடினார்கள்.. அங்கு ஜெகனுக்கு உடனடியாக தீவிர சிகிச்சை தரப்பட்டது.. தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருக்கிறதாம். அதனால் 10 தையல் போடப்பட்டுள்ள.. கை, கால்களிலும் பலமான காயம் ஏற்பட்டுள்ளதாக கூறுகிறார்கள்.

இதனால் ரெயிடுக்கு வந்த போலீஸ்காரர்கள் அனைவரும் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் குவிந்திருக்க, இதையே சாக்காக பயன்படுத்தி கொண்ட ஸ்பா சென்டரின் ஏஜெண்ட் மற்றும் அங்கிருந்த பெண்கள் அனைவருமே ஸ்பா சென்டரை மூடி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார்களாம். எனவே இது தொடர்பான விசாரணையை போலீசார் நடத்தி வருகிறார்கள்.

பாலியல் தொழில்: கடந்த 2 மாதத்துக்கு முன்புகூட, திருப்பத்தூர் வாணியம்பாடி சாலை அருகே தூய நெஞ்ச கல்லூரி எதிரே உள்ள ஸ்பா சென்டரில் பாலியல் தொழில் செய்து செய்த தமிழ்ச்செல்வன் (30) என்ற புரோக்கரை போலீசார் கைது செய்தனர்.. மேலும், 40 வயது மற்றும் 24 வயது வெளிநாட்டு பெண்களையும் ஸ்பாலிருந்து மீட்டு, அரசு காப்பகத்திற்கு அனுப்பி வைத்திருந்தனர்.

"சட்டவிரோதமாக ஸ்பா என்கிற பெயரில் இது போன்று பாலியல் தொழிலில் ஈடுபவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுவார்கள், உண்மைத் தன்மை கண்டறியப்பட்டால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர்ஸ்ரேயா குப்தா ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், தற்போது மீண்டும் ரெய்டு நடந்துள்ளது,

பரபரப்பு: ஆனால், மொட்டை மாடிக்கு, சந்தேகத்தின்பேரில் போலீஸ்காரர் ஜெகன் ஓடினாரா? அல்லது யாராவது தப்பி மொட்டை மாடிக்கு ஓடுவதை பார்த்தாரா? என்று தெரியவில்லை. இந்த ரெயிடு விவகாரம் திருப்பத்தூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

# வைரலாகும் கீர்த்தி சுரேஷின் புகைப்படங்கள்



தமிழில் 'இது என்ன மாயம்' படத்தின் மூலம் அறிமுகமான கீர்த்தி சுரேஷ் 'நடிகையர் திலகம்' படத்திற்காக தேசிய விருது பெற்றார். தமிழ், தெலுங்கில் பிசியாக நடித்து வரும் கீர்த்தி சுரேஷ் தற்போது இந்தியில் 'தெறி' படத்தின் ரீமேக்கில் நடித்து வருகிறார்.

இப்படி பிசியாக வலம் வரும் கீர்த்தி சுரேஷ் விரைவில் கேரளாவை பூர்வீகமாக கொண்ட துபாயை சேர்ந்த தொழிலதிபர் ஆண்டனி தட்டில் என்பவரை திருமணம் செய்து கொள்ள உள்ளார் என்று தகவல் வெளியானது. 15 ஆண்டுகளாக காதலித்து வரும் இவர்களின் திருமணத்திற்கு இருவீட்டாரும் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் விரைவில் அறிவிப்பு வெளியாகும் என்றும் கூறப்பட்டது.

இதனிடையே, கடந்த வாரம் குடும்பத்தினருடன் திருப்பதியில் சாமி தரிசனம் செய்த நடிகை கீர்த்தி சுரேஷ் செய்தியாளர்களிடம் கூறும் போது, இந்தியில் 'பேபி ஜான்' என்ற படத்தில் நடித்து வருகிறேன். அடுத்த மாதம் (டிசம்பர்) எனக்கு திருமணம் நடைபெற உள்ளதால் ஏழுமலையானை தரிசித்தேன். திருமணம் கோவாவில் நடைபெறுகிறது என்றார்.

இந்த நிலையில், கீர்த்தி சுரேஷின் லேட்டஸ்ட் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது. இன்ஸ்டாகிராமில் நண்பரின் திருமணத்திற்காக தயாரான போது எடுத்த புகைப்படங்களை கீர்த்தி சுரேஷ் பகிர்ந்துள்ளார். இதனை ரசிகர்கள் வைரலாக்கி வருகின்றனர்.

# பிரபல தென்கொரிய நடிகர் மரணம்



தென்கொரியா நாட்டை சேர்ந்த இளம் நடிகர் பார்க் மின் ஜே (வயது 32). சீனாவில் சுற்றுப்பயணம் செய்து வந்தபோது, மாரடைப்பு ஏற்பட்டு அவர் உயிரிழந்து உள்ளார். இதுபற்றி தென்கொரியாவின் எக்ஸ்போர்ட்ஸ் நியூஸ் என்ற வலைதளம் வெளியிட்டு உள்ள செய்தியில், சீனாவில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, நவம்பர் 29ந்தேதி மாரடைப்பால் பார்க் மின் ஜே காலமானார் என தெரிவித்து உள்ளது.

இந்த தகவலை அவருடைய பிக் டைட்டில் என்ற நிறுவனமும் உறுதி செய்துள்ளது. இதுபற்றி அதன் இன்ஸ்டாகிராமில் வெளியிடப்பட்ட செய்தியில், நடிப்பை விரும்பிய அழகான ஒரு நடிகர் மற்றும் எப்போதும் சிறந்த முறையில் செயல்பட்ட பார்க் மின் ஜே சொர்க்கத்துக்கு சென்றிருக்கிறார் என தெரிவித்து உள்ளது.

அவருடைய நடிப்பை இனி நாம் காண முடியாது. ஆனால், அவரை பெருமையுடன் எப்போதும் நாம் நினைவுகூர்வோம் என்றும் தெரிவித்து உள்ளது. சீனாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கு முன்பு, அவருக்கு பெரிய அளவில் சுகாதார பாதிப்புகள் எதுவும் இருக்கவில்லை என்றும் அந்த நிறுவனம் தெரிவித்து உள்ளது.

அவர், மிஸ்டர் லீ (2021), லிட்டில் உமன் (2022), ஸ்னாப் அண்டு ஸ்பார்க் (2023 முதல் 2024 வரை) மற்றும் கொரியாகீத்தன் வார் (2023 முதல் 2024 வரை) போன்ற தொலைக்காட்சி தொடர்களில் நடித்துள்ளார். பார்க்கின் இறுதி சடங்கு இன்று நடைபெற உள்ளது.

# இன்னும் கொஞ்சம் நாட்களில் ரிலீஸ்.. புது அப்டேட் கொடுத்த ராஜாகிளி படக்குழு



தமிழ் சினிமாவில் நகைச்சுவை நடிகராகவும் குணச்சித்திர நடிகராகவும் இருப்பவர் தம்பி ராமையா. ஏற்கனவே சமுத்திரகனி மற்றும் தம்பி ராமையா இணைந்து சாட்டை, அப்பா, வினோதய சித்தம் போன்ற படங்களில் நடித்திருந்தனர்.

இந்த நிலையில் ராஜாகிளி என்ற புதிய படத்தில் சமுத்திரக்கனி மற்றும் தம்பி ராமையா இணைந்து நடித்துள்ளனர். 'மாநாடு', 'கங்காரு', 'மிகமிக அவசரம்' உள்ளிட்ட படங்களை தயாரித்த வி ஹவுஸ் புரொடக்சன்ஸ் சார்பில் தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி இப்படத்தை தயாரித்துள்ளார்.

இந்தப் படத்தின் கதையின் நாயகனாக சமுத்திரக்கனியும், கதாநாயகிகளாக சுவேடா ஷ்ரிம்ப்டன், மியாஸ்ரீ சவுமியா ஆகியோர் நடிக்கின்றனர். எம்.எஸ். பாஸ்கர், பழ.கருப்பையா, இளவரசு, ஆடுகளம் நரேன், பிரவின்.ஜி, இயக்குனர் மூர்த்தி, 'கும்கி' அஸ்வின், ரேஷ்மா, வெற்றிக்குமரன், 'கும்கி' தரணி, தீபா, பாடகர் கிரிஷ், ஜி.பி.முத்து உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப்படத்தை தம்பி ராமையாவின் மகன் உமாபதி ராமையா இயக்கியுள்ளார். இப்படத்திற்கு கதை, வசனம், திரைக்கதை, பாடல் வரிகள் மற்றும் இசையமைப்பாளராக தம்பி ராமையா பணியாற்றியுள்ளார். இந்தப் படத்திற்கு கேதர்நாத் ஒளிப்பதிவு செய்துள்ளார். ராஜாகிளி திரைப்படம் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டு, பிறகு இதன் ரிலீஸ் தேதி தள்ளிவைக்கப்பட்டது.

இந்த நிலையில், ராஜாகிளி திரைப்படம் வருகிற டிசம்பர் 29 ஆம் தேதி வெளியாகும் என்று படக்குழு அறிவித்து இருக்கிறது. மேலும், படத்தின் புதிய போஸ்டரும் வெளியிடப்பட்டு இருக்கிறது.

# 3 ரன் கொடுத்து 5 விக்கெட் வீழ்த்திய சுபியான் முக்கிம்: ஜிம்பாப்வேயை சுருட்டியது பாகிஸ்தான்




பாகிஸ்தான் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் டி20 தொடர்களில் விளையாடி வருகிறது. முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் 21 என தொடரைக் கைப்பற்றியது. முதல் டி20 போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்று 10 என முன்னிலை பெற்றுள்ளது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 2வது டி20 போட்டி புலவாயோவில் இன்று நடைபெற்றது. டாஸ் வென்ற ஜிம்பாப்வே பேட்டிங் தேர்வு செய்தது

அதன்படி, முதலில் ஆடிய ஜிம்பாப்வே 12.4 ஓவரில் 57 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. தொடக்க ஆட்டக்காரர்கள் மட்டும் இரட்டை இலக்கத்தை தாண்டினர்.

பாகிஸ்தான்சார்பில் சிறப்பாக பந்துவீசிய சுபியான் முக்கிம் 2.4 ஓவரில் வெறும் 3 ரன்கள் விட்டுக்கொடுத்து 5 விக்கெட் வீழ்த்தி அசத்தினார். அடுத்து களமிறங்கிய பாகிஸ்தான் 5.3 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 61 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றதுடன், டி20 தொடரையும் கைப்பற்றியது.

# உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்: பந்துவீச்சில் சொதப்பல்.. 3 புள்ளிகளை இழந்த நியூசிலாந்து



ஐசிசி நடத்தும் 20232025 உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் 2025ம் ஆண்டு நடைபெறவுள்ளது. இன்னும் 16 போட்டிகள் மட்டுமே மீதமுள்ளது.

இறுதிப்போட்டிக்கு தகுதி பெற இந்தியா, நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியா, தென் ஆப்ரிக்கா, நியூசிலாந்து, இலங்கை ஆகிய அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேற கடும் போட்டியிடுகின்றன.

புள்ளிப்பட்டியலில் முதல் 5 இடத்தில் இந்தியா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இலங்கை ஆகிய அணிகள் உள்ளன.

இதற்கிடையே, நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்துள்ள இங்கிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்டில் இங்கிலாந்து அபார வெற்றி பெற்று தொடரில் 10 என முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில், இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நியூசிலாந்து அணி தாமதமாக பந்து வீசியதால் அந்த அணிக்கு உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் 3 புள்ளிகளைக் குறைத்துள்ளது.

இதனால் புள்ளிப்பட்டியலில் 4வது இடத்தில் இருந்த நியூசிலாந்து அணி 5வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் இலங்கை அணி இறுதிப்போட்டிக்குள் நுழைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

# வலை பயிற்சியில் ஆஸ்திரேலியா வீரர்களுக்கு காயம்

ஆஸ்திரேலியா இந்தியா அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 295 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னையில் உள்ளது.

இரு அணிகளுக்கும் இடையேயான 2வது டெஸ்ட் போட்டி அடிலெய்டில் வருகிற 6ந் தேதி தொடங்குகிறது.

இந்நிலையில் இரு அணி வீரர்களும் அடிலெய்டில் பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர். பயிற்சியின் ஆஸ்திரேலிய வீரர்களான ஸ்மித், மார்னஸ் லபுஷேன் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. ஸ்மித்க்கு கை விரலில் காயம் ஏற்பட்டுள்ளது. அவரை அந்த அணியின் பிசியோ தெரபிஸ்ட் கண்காணித்தார். இதனையடுத்து அவர் வலைபயிற்சியில் இருந்து வெளியேறினார். இருவருக்கும் காயம் எந்த அளவு இருக்கிறது என்பது குறித்து சரியான தகவல் ஏதும் வெளியாகவில்லை. இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.